மன்னார்குடி பட்டாசு ஆலையில் வெடிவிபத்து : ஒருவர் பலி

திருவாரூர், ஜூன் 17

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியில் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட விபத்தில் உரிமையாளரின் மகன் உயிரிழந்தார்.

மன்னார்குடி தாமரைக் குளம்,வடகரையைச் சேர்ந்த மறைந்த மனோகரன் மனைவி விஜயலட்சுமி இவர்களின் மூத்த மகன் செல்வகுமார் ஆகியோருக்கு சொந்தமான நாட்டு பட்டாசுகள் தயாரிப்பு ஆலை மாதா கோயில் தெரு, கருத்தனாபுரத்தில் பல ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது. இந்த ஆலையின் மேற்கூரை தகர சீட்டால் அமைக்கப்பட்டுள்ளது. இதில்,ஒரு செட்டில் பட்டாசு தயாரிப்பும், மற்றொரு செட்டில்பட்டாசுகள்இருப்பும் வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், நேற்று ஞாயிற்றுக்கிழமை விடுமுறை என்பதால் மனோகரனின், மகன் சதீஷ்குமார் (35), பணியாளர் கருத்தனாபுரத்தைச் சேர்ந்த அருண்குமார் (19) ஆகிய இருவர் மட்டும் வேலை பார்த்து வந்தனர்.

இந்நிலையில், மதியம் பட்டாசு தயாரிக்கும் பகுதியில் திடீரென தீ விபத்து ஏற்பட்டதில், பட்டாசுகள் வெடித்து சிதறியது. இதில் அங்கிருந்த சதீஷ்குமார், அருண்குமார் ஆகியோருக்கு பலத்த தீக்காயங்கள் ஏற்பட்டது. இதையடுத்து இருவரும் உடனடியாக மீட்கப்பட்டு மன்னார்குடி அரசு தலைமை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இந்நிலையில், சதீஷ்குமார் சிகிச்சை பலனிக்காமல் உயிரிழந்தார். அருண்குமாருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

வயல்வெளியில் இந்த நாட்டு வெடி தயாரிக்கும் கூடம் அமைந்திருந்ததால் தீயணைப்பு வாகனம் செல்வதற்கு வழியில்லாமல் மிகுந்த சிரமத்திற்கு இடையே தீயணைப்பு வாகனம் மட்டுமே செல்ல முடிந்தது. வெடி விபத்து ஏற்பட்ட பின்பும் நீண்ட நேரத்திற்கு அங்கு இருந்த வெடிகள் வெடித்த வண்ணம் இருந்ததால் தீயணைப்பு படையினர் தீயை அணைக்க மிகுந்த சிரமப்பட்டனர். தொடர்ந்து வெடிச்சத்தமும், புகையும் வந்த வண்ணமாகவே இருந்தது. இந்த வெடி விபத்தால் அந்த கூடத்தின் கட்டிடம் மற்றும் தகர்த்தினால் ஆன மேற்கூரை பக்கத்து வயல்களிலும் சிதறி கிடந்தது

மன்னார்குடி காவல் நிலையத்தில் அளிக்கப்பட்ட புகாரின் பேரில் போலீசார் வழக்குப் பதிந்து விசாரித்து வருகிறார்கள். திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ் ஜெயக்குமார் நேரில், பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே அய்யூர் கிராமத்தில் இன்று பக்ரீத் பண்டிகையை முன்னிட்டு அங்கு உள்ள முகையதீன் ஆண்டகை ஜிம்ஆமஸ் ஜிது பள்ளிவாசலில் சிறப்பு தொழுகை நடைபெற்றது. முன்னதாக தொழுகைக்கு கலந்து கொள்வதற்காக இஸ்லாமியர்கள் ஊர்வலமாக சென்றனர்.

பழனி அருகே யானை தந்தம் விற்க முயன்ற 3 பேர் கைது

பழனி ஜூன். 17

பழனி அருகே யானை தந்தம் விற்க முயன்ற மூன்று பேர் கைது திண்டுக்கல் மாவட்டம் பண்ணைக்காடு பகுதியை சேர்ந்த ராமன் வயது 53 இவர் பழனி வனச்சரகத்திற்கு உட்பட்ட பாலசமுத்திரம் கிழக்கு அடர் வனப்பகுதியில் தேன் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். அப்பொழுது பாறை இடுக்கு அருகே யானை ஒன்று இறந்து இருந்தது அதை பார்த்ததும் அருகே சென்றுள்ளார். அங்கே யானை தந்தம் கிடந்ததை பார்த்ததும் அதை எடுத்துக்கொண்டு ஊருக்கு சென்று விட்டார். இந்நிலையில் அவர் வேலை செய்த தோட்டத்தின் உரிமையாளரான கன்னிவாடியைச் சேர்ந்த சோமசுந்தரம் வயது 49 என்பவரிடம் யானை தந்தம் கிடைத்தது பற்றி கூறியுள்ளார். இதையொட்டி சோமசுந்தரம் யானை தந்தத்தை விற்பனை செய்ய பல புரோக்கர்களை அணுகி உள்ளார். இத்தகவல் மதுரை மண்டல தமிழ்நாடு வன மற்றும் வன உயிரின குற்றங்கள் கட்டுப்பாட்டு பிரிவு தனிப்படையினருக்கு தகவல் கிடைத்தது. அவர்கள் தந்தம் வாங்க வந்தவர்களைப் போல சோமசுந்தரத்தை அணுகினார். அவரிடம் இருந்த இரண்டு அடி நீளம் உள்ள இரு தந்தங்கள் ஐம்பது லட்சம் வரை பேரம் பேசப்பட்டது. அதற்கு முதல் தவணையாக 15 லட்சம் தருமாறு சோமசுந்தரம் கேட்டுள்ளார். அதன்பின்பு புரோக்கராக செயல்பட்ட வயலூரை சேர்ந்த கணேசன் என்பவரை மடக்கிப் பிடித்தனர். பின்பு மூன்று பேரையும் வனத்துறையினர் பிடித்து கைது செய்தனர். இது பற்றி திண்டுக்கல் உதவி வன பாதுகாவலர் சக்திவேல் வன பாதுகாப்பு படை உதவி பாதுகாவலர் நிர்மலா ஆகியோர் மூவரையும் கைது செய்து அவரிடம் இருந்த செல்போன் மற்றும் 3 பைக்குகளை பறிமுதல் செய்தனர்.

விருதுநகரில் எம்.பி மாணிக்கம் தாகூர் நன்றி அறிவித்தல் சுற்றுப்பயணம்

விருதுநகர் ஜூன். 17–

விருதுநகரில் எம். பி மாணிக்கம் தாகூர் நன்றி அறிவித்தல் சுற்றுப்பயணத்தில் ஈடுபட்டுள்ளார். அப்போது அவர் பத்திரிகையாளர் சந்திப்பில் கூறியதாவது:

1000 இடங்களில் நன்றி கூறுவதற்காக இன்று பக்ரீத் பக்ரீத் திருநாள் அன்று ஆரம்பித்திருக்கிறோம். விருதுநகர் நகர் பகுதிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் நன்றி சொல்லி வருகிறோம். வருகின்ற சட்டமன்ற இடைத்தேர்தலை அண்ணா தி.மு.க.வும் அதன் கூட்டணி கட்சிகளும் புறப்பணிப்பதாக அறிவித்துள்ளது பற்றி கேட்டதற்கு, முதலாளி என்ன சொன்னாரோ அதை எடப்பாடியார் செய்திருக்கிறார். மோடியும் அமித்ஷாவும் இந்த கட்டளையை சொல்லி இருக்கிறார்கள். அதை எடப்பாடியார் நிறைவேற்றி இருக்கிறார்.

சிவகாசி பட்டாசு தொழில் பிரச்சனை பற்றி நாடாளுமன்றத்தில் முதல் குரலாக எழுப்புவேன். மேலும் விருதுநகர் மாவட்டத்தில் சிறு மற்றும் குறு தொழில்கள் மீது திணிக்கப்பட்டுள்ள ஜிஎஸ்டி வரியை பற்றிய குறைப்பதற்கும் குரல் கொடுப்பேன். சுதந்திர போராட்ட தியாகிகளை இங்கு ஜாதி தலைவர்களாக மாற்றி வைத்துள்ளார்கள் என்று ஆளுநர் ரவி கூறுவது, ஆர் எஸ் எஸ்ல் இருந்து வந்தபாஜகவோமற்றவர்களோ கூறுவதற்கு எந்தவித அருகதையும் இல்லை. இந்த ஜாதி அரசியலைப் பற்றியும் மத அரசியலை பற்றியும் ஆர்எஸ்எஸ்ல் அடிப்படையில் இருந்து உருவானது. அதிலிருந்து வந்தவர்தான் கவர்னர் ரவி. பாஜகவில் ரவுடியிசத்தில் ஈடுபட்டவர்களை மட்டுமே சேர்த்து வருகிறார்கள். ரவுடிகளின் கட்சியாக மாறி வருகிறது. இதை தமிழிசை சௌந்தர்ராஜன் சொல்லி உள்ளார். காங்கிரஸ் கட்சியில் கருத்து மோதல் என்பது ஜனநாயக பூர்வமாக நடைபெறுகிறது. அனைவரின் கருத்தும் ஒன்றே. சொல்லுகின்ற விதம் மட்டுமே மாறி உள்ளது. நெல்லையில் ஜெயக்குமாரின் கொலை வழக்கு நல்ல முறையில் நேர்மையான முறையில் தமிழக அரசு நடத்தி வருகிறது. அதில் நல்ல முடிவு கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம். இவ்வாறு கூறினார். உடன் திமுக எம்எல்ஏ சீனிவாசன், நகரமன்ற தலைவர் மாதவன், மாவட்ட தலைவர் ஸ்ரீ ராஜா சொக்கர், சிவஞானபுரம் பஞ்சாயத்து தலைவர் கிருஷ்ணமூர்த்தி உட்பட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

காரைக்குடி நேஷனல் கேட்டரிங் கல்லூரி பட்டமளிப்பு விழா

"வளர்தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி வீட்டையும் நாட்டையும் மேம்படுத்துங்கள்"அழகப்பா பல்கலைக்கழகப் பதிவாளர் அறிவுரை

காரைக்குடி ஜூன். 17–

காரைக்குடி நேசனல் கேட்டரிங் மற்றும் பயர் சேப்டி கல்லூரிகளில் பட்டமளிப்பு விழா, கல்லூரி வளாகக் கலையரங்கில் நடைபெற்றது.

இவ்விழாவிற்கு கல்லூரி தாளாளர் லயன். சையது தலைமை வகித்து, வரவேற்புரையாறினார். இயக்குநர் மனோகர் முன்னிலை வகித்தார். நிர்வாக இயக்குநர் தினேஷ், பட்டமளிப்பு விழாவினைத் தொடங்கி வைத்தார். அழகப்பா பல்கலைக்கழகப் பதிவாளர், முனைவர். செந்தில்ராஜன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில்,

"கேட்டரிங் கல்லூரி மற்றும் ஃபயர் சேப்டி கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள், விடாமுயற்சியுடன் இலக்கை நோக்கி பயணிக்க வேண்டும்; தொழில் முனைவோராக வரவேண்டும், வளரவேண்டும் என்ற எண்ணங்களை மனதில் நிலைநிறுத்துங்கள். வளர்ந்துவரும் நவீன மற்றும் புதிய தொழில்நுட்பங்களை பணியிலும், தொழிலிலும், செயல்படுத்தி, வீடு, நாடு மற்றும் சமூகத்திற்கும் மிகவும் பயனுள்ளவகையில் வாழுங்கள்", எனக் கூறினார்.

அதனைத்தொடர்ந்து, இரு கல்லூரி மாணவர்களுக்கும் பட்டங்களை வழங்கிச் சிறப்பித்தார். இவ்விழாவில் கேட்டரிங் கல்லூரி முதல்வர் நவீன், ஃபயர் சேப்ட்டி கல்லூரி முதல்வர் தனசீலன், துறைத் தலைவர்கள் பாலசுப்பிரமணியன், அபுபக்கர் சித்திக் மற்றும் தொழில் வணிக கழகத் தலைவர் சாமி திராவிடமணி, செயலர் லயன். கண்ணப்பன், பொருளாளர் சரவணன் ரோட்டேரியன் கந்தசாமி, ஸ்டான்லி அகாடமி நிக்சன், மற்றும் பெற்றோர்கள், மாணவர்கள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

மனிதநேயமும், நல்லிணக்கமும் தழைத்தோங்கட்டும்;

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசிய தலைவர் கே.எம். காதர் மொகிதீன் வாழ்த்து

திருச்சி, ஜூன். 17–

மனிதநேயமும், நல்லிணக்கமும் தழைத்தோங்கட்டும் என்று புனித ஹஜ்ஜூப் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசிய தலைவர் பேராசிரியர் கே. எம். காதர் மொகிதீன் 16.06.2024 ஞாயிற்றுக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது :

ஹஜ்ஜூப் பெருநாள் என்னும் ஈதுல் அழ்ஹா தியாகத் திருநாள் தமிழகத்தில் பக்ரீத் பண்டிகை எனவும், சூட்டுக்கறி நோன்பு எனவும் குர்பானி கொடுக்கும் திருநாள் எனவும் பலவாறு அழைக்கப்படுவதை அறிவோம்.

இஸ்லாமிய மார்க்கத்தின் மூலமாகத் திகழ்வது ஏக இறைவனின் நம்பிக்கையும், அந்த இறைவன் மனித இனத்தை நல்லது செய்வதற்கும் தீயதை விலக்குவதற்கும் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் தீர்க்கதரிசிகள் எனப்படும் இறைஞான போதகர்கள் மனித சமுதாயத்தவரிடையில் வந்துதித்திருக்கின்றனர். அந்தத் தீர்க்கதரிசிகளில் இறுதியானவர் ஏந்தல் நபி முஹம்மது(சல்அம்) அவர்கள் ஆவார்கள்.

நபிகள் நாயகத்திற்கு முன்பு உலகில் தோன்றிய தீர்க்கதரிசிகளில் நபி இப்ராஹீம், நபி இஸ்மாயில் ஆகியோரின் வரலாற்றுடன் பின்னிப்பிணைந்திருப்பது புனித ஹஜ் பயணம் ஆகும்.

ஹஜ் பயணத்தில் இவ்விரு நபிகளுடன், நபி இஸ்மாயில் அவர்களின் தாயார் ஹாஜரா அவர்களும் நினைவுகூரத்தக்கவர்களாக இருக்கின்றனர். இம்மூவரின் வரலாற்றுடன் ஹஜ் பயண நிகழ்வுகள் தொடக்கம், தொடர்பு, நிறைவு பெறுகின்றன. அதுவே இஸ்லாமிய மார்க்கத்தில் நபி முஹம்மது (சல் அம்) அவர்களால், ஐந்தாவது கடமையாக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு ஆண்டிலும் உலக முஸ்லிம்களும் சவுதி அரேபிய முஸ்லிம்களும் குறைந்த பட்சம் இருபது லட்சம் பேர் புனித ஹஜ் பயணத்தில் பங்கேற்கின்றனர். இந்தியத் திருநாட்டில் இருந்து இரண்டு லட்சம் முஸ்லிம்கள்; தமிழகத்தில் இருந்து சற்றொப்ப ஆறாயிரம் பேர் ஹாஜிகள் ஆகின்றனர்.

கவிஞர் காயல் இளவரசு சொல்வது போல, """"அல்லாஹ்வின் நண்பரின் அழைப்பின் தாக்கம் அகிலத்தை அங்கே கூட்டுது அவன் அற்புதம் உணரும் வழியைத்தான் இந்த ஹஜ்ஜூப் பெருநாள் காட்டுது"" எல்லோரும் நல்லோராய் வாழ்ந்திடவும், அனைவரும் மனித நேயத்துடன் சிறந்திடவும், ஒருவருக்கொருவர் உதவிடும் பண்பாடு எங்கெணும் ஓங்கிடவும் இந்நாளில் வாழ்த்துவோம். எங்கும் தங்குக இன்பமும் நல்லிணக்கமும்! இவ்வாறு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மதுரையில் ரத்த கொடையாளர் தின விழா: கலெக்டர் தலைமையில் உறுதிமொழி

மதுரை, ஜூன். 17–

மதுரையில் உலக இரத்த கொடையாளர் தின விழா மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் ரத்த கொடை பற்றிய விழிப்புணர்வு தகவல், கல்வி தொடர்பான பதாகைகளை திறந்து வைத்தபின் மாவட்ட கலெக்டர் தலைமையில் நர்சிங் மாணவிகள், மருத்துவத்துறை அதிகாரிகள், இரத்த வங்கி அலுவலர்கள், குருதி கொடையாளர்கள், டான்சாக்ஸ் பணியாளர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் பிரதர்சிகா, தாய் விழுதுகள், பேஸ் அறக்கட்டளை, நிலா ட்ரஸ்ட் , பிளான் இன்டியா மற்றும் தன்னார்வளர்கள் உறுதி மொழி எடுத்துக் கொண்டனர்.

மேலும் மாவட்ட கலெக்டரக வளாகத்தில் நர்சிங் கல்லூரி மாணவ மாணவிகளின் இரத்ததான விழிப்புணர்வு பேரணியை மாவட்ட கலெக்டர் கொடி அசைத்து துவக்கி வைத்தார். பேரணி பனகல் சாலை வழியாக அரசு ராஜாஜி மருத்துவமனை கூட்ட அரங்கை அடைந்தது. அதன்பின் கருத்தரங்கம் மற்றும் இரத்த கொடையாளர்களுக்கு விருது, சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

இவ்விழாவில் டீன் (பொ) டாக்டர் தர்மராஜ் மாவட்ட சுகாதார அலுவலர் டாக்டர் குமரகுருபரன், இணை இயக்குநர் நலப்பணிகள் டாக்டர் செல்வராஜ், மாவட்ட இரத்த பரிமாற்று அலுவலர் டாக்டர் சிந்தா, "டான்சாக்ஸ்" மாவட்ட திட்ட மேலாளர் ஜெயபாண்டி உட்பட டான்சாக்ஸ் பணியாளர்கள், ரத்த வங்கி அலுவலர்கள், செவிலியர் கல்லூரி பேராசிரியர்கள் தன்னார்வ தொண்டு நிறுவன பணியாளர்கள், 153 முறை ரத்த தானம் செய்த ஜோஸ், 114 முறை ரத்த தானம் செய்த வரதராஜன் மற்றும் பாம்பே குரூப் போன்ற அரிய வகை இரத்த கொடையாளர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

தஞ்சாவூர் மாவட்டம் அரண்மனை வளாக கலைக்கூடத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் முன்னேற்றம் குறித்து மாவட்ட கலெக்டர் தீபக் ஜேக்கப் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

சின்னாளபட்டி காமாட்சி காலனியில் டெங்கு மலேரியா பரவும் அபாயம்: பொது கழிப்பறை செப்டிக் டேங்கிலிருந்து கழிவுநீர் திறந்த வெளியில் செல்வதால் துர்நாற்றம்

சின்னாளபட்டி, ஜூன். 17–

1வது வார்டு காமாட்சி காலனியில் பொது சுகாதாரம் சீரழிந்து வருவதால் டெங்கு மற்றும் மலேரியா பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. பொது கழிப்பறை செப்டிக் டேங்கிலிருந்து கழிவுநீர்கள் திறந்த வெளியில் செல்வதால் துர்நாற்றம் வீசுவதாக பொதுமக்கள் புகார் செய்கின்றனர்.

திண்டுக்கல் மாவட்டம், சின்னாளபட்டி 1வது வார்டில் உள்ளது காமாட்சி காலனி. இக்காலனியில் அருந்ததியர் சமுதாயத்தைச் சேர்ந்த பொதுமக்கள் வசித்து வருகின்றனர். பொதுமக்கள் பயன்பாட்டிற்காக பொதுக்கழிப்பறை உள்ளது. இக்கழிப்பறைகளில் சுகாதார சீர்கேடுகள் அதிகம் உள்ளதாக அப்பகுதி மக்கள் புகார் செய்கின்றனர். குறிப்பாக வேலி போட்டு அடைத்து வைத்திருக்கும் செப்டிக் டேங்க் மூடி இல்லாமல் துர்நாற்றம் வீசுவதாக செப்டிக் டேங்க கழிவுநீர் திறந்த வெளியில் செல்வதால் பொதுசுகாதாரம் பாதிக்கப்படுவதாக அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் கூறுகின்றனர். இதுதவிர கழிப்பறை எதிரே உள்ள சின்டெக்ஸ் தொட்டியிலிருந்து தண்ணீர் வீணாகி வருவதாகவும், பொதுமக்கள் குடத்தை வைத்து தண்ணீர் பிடிக்கும் இடம் கழிவுகள் நிறைந்த இடமாக இருப்பதால் தொற்றுநோய் பரவி வருவதாக அப்பகுதி மக்கள் புகார் தெரிவிக்கின்றனர். இதுகுறித்து சிக்கனம்பட்டி காமாட்சி காலனியைச் சேர்ந்த பன்னீர்செல்வம் (பா.ஜ.க. கிளைச் செயலாளர்) கூறுகையில்,

பேரூராட்சி அலுவலகத்திற்கு சென்று பலமுறை வடிகாலையும், செப்டிக் டேங்கையும் சுத்தம் செய்ய மனு கொடுத்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. வடிகால் முழுவதும் கழிவுகள் நிறைந்துள்ளன. இதுதவிர பொதுக் கழிப்பறையில் கதவுகள் இல்லாததால் பொதுமக்கள் பயன்படுத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் செக்காபட்டி முதல் சிக்கனம்பட்டி வரை வரும் சாலையைத் தான் பெண்கள் திறந்தவெளி கழிப்பிடமாக பயன்படுத்துகின்றனர் என்றார். அப்பகுதியைச் சேர்ந்த முருகன் கூறுகையில்,

எங்கள் பகுதியில் பொதுக்கழிப்பறை தொற்று நோய் பரப்பும் இடமாக உள்ளது, காலை மற்றும் மாலை நேரங்களில் பொதுக்கழிப்பறை செப்டிக் டேங்க்கிலிருந்து வெளியேறும் கழிவுநீரிலிருந்து துர்நாற்றம் வீசுவதால் அப்பகுதியை கடக்கும்போது பொதுமக்கள் மிகுந்த சிரமப்படுகின்றனர். இதுதவிர எங்கள் பகுதிக்கு துப்புரவு மேற்பார்வையாளரோ, ஆய்வாளரோ வருவது கிடையாது. வடிகாலை சுத்தம் செய்து மாதக்கணக்கில் ஆகிவிட்டது. எங்கள் பகுதி முழுவதும் தொற்று நோய் பரவும் இடமாக மாறி வருகிறது என்றார். சிக்கனம்பட்டி காமாட்சி காலனியைச் சேர்ந்த தாயம்மாள் சிக்கனம்பட்டி காமாட்சி காலனி பகுதியில் பொதுசுகாதாரம் கேள்விக் குறியாகி வருகிறது. கழிப்பறை உள்ளே சென்றால் வாந்தி, மயக்கம் தான் வருகிறது. எங்கள் பகுதி மக்கள் நலன் கருதி கூடுதலாக பொதுக்கழிப்பறை ஒன்று கட்டிக் கொடுக்க வேண்டும் இதே நிலைமை நீடித்தால் கொரோனா உட்பட தொற்றுநோய் பரவும் இடமாக காமாட்சி காலனி மாறிவிடும் என்றார். இதுபோல கழிப்பறை எதிரே உள்ள சின்டெக்ஸ் தண்ணீர்; தொட்டி சேதமடைந்து உள்ளது தண்ணீர் வீணாகி வருகிறது. தண்ணீர் பிடிக்கும் இடம் சுகாதார சீர்கேடுடன் உள்ளது. சின்டெக்ஸ் தண்ணீர் தொட்டியை சுற்றி சிமெண்ட் தளம் அமைத்துக் கொடுத்து கழிவுநீர் அருகில் உள்ள வடிகாலுக்கு செல்லும்படி தளம் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்றார். சின்னாளபட்டி பேரூராட்சியில் காலையில் துப்புரவு பணியாளர்களை வார்டுகளில் உள்ள துப்புரவு வேலைகளுக்கு அனுப்பும் துப்புரவு மேற்பார்வையாளர்கள் பேரூராட்சி அலுவலகத்தை விட்டு வெளியே செல்வது கிடையாது. இதனால் துப்புரவு பணியாளர்கள் முறையாக சுத்தம் செய்கிறார்களா என்பதை கூட பார்க்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பேரூராட்சி நிர்வாகம் துப்புரவு மேற்பார்வையாளர்களுக்கு சீருடை மற்றும் அடையாள அட்டை வழங்கி அவர்கள் பணியில் இருக்கிறார்களா என்று பொதுமக்களுக்கு அடையாளம் காட்டினால் தான் பொதுமக்களும் துப்புரவு பணிகள் குறித்து அவர்களிடம் நேரடியாக சென்று புகார் செய்ய முடியும். இதை விட்டுவிட்டு பல வண்ணங்களில் சீருடை அணிய விட்டால் துப்புரவு மேற்பார்வையாளர்கள் பணியில் இருக்கிறார்களா இல்லையா என்பது கூட தெரியாமல் போய்விடும்.

சோழவந்தான் அருகே தென்கரையில் டி.ஆர். மகாலிங்கம் நூற்றாண்டு விழா

சோழவந்தான் ஜூன்.12

மதுரை மாவட்டம் சோழவந்தான் அருகே உள்ள தென்கரை கிராமத்தை சேர்ந்தவர் பிரபல பாடகர் நடிகர் டி ஆர் மகாலிங்கம். இவரது நூற்றாண்டு விழாவை ஒட்டி வரும் ஜூன் 15 மற்றும் 16 தேதிகளில் தென்கரையில் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட உள்ளது.

தமிழ் திரை உலகில பிண்ணனி பாடகர் நடிகர் நாடக நடிகர் இசையமைப்பாளர் உள்ளிட்ட பன்முகத்தன்மை கொண்டவர் பிரபல இசை கலைஞர் கலைமாமணி டி ஆர் மகாலிங்கம். இவர் மதுரை மாவட்டம் சோழவந்தான் அருகே உள்ள தென்கரை கிராமத்தை சேர்ந்தவர். கடந்த 1924 ஆம் ஆண்டு ஜூன் 16 இல் பிறந்த இவருக்கு வரும் ஜூன் 16ல் அவர் பிறந்த தென்கரை கிராமத்தில் நூற்றாண்டு விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் ஏற்பாடுகளை அவரது பேரன் திரு ராஜேஷ் மகாலிங்கம் செய்து வருகிறார். இதையொட்டி அவர் வாழ்ந்த தென்கரை வீட்டில் அவர் சம்பந்தப்பட்ட புகைப்படங்கள் விருதுகள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. மேலும் அவரது திருஉருவச் சிலையும் அன்றைய தினம் திறக்கப்படவுள்ளது. இந்நிகழ்ச்சியில் தமிழ்த் திரைத்துறையின் பிரபல நடிகர்கள் நடிகைகள் கலந்து கொள்ள உள்ளனர். பிரபல தமிழ் சினிமாவான பட்டிக்காடா பட்டணமா என்ற திரைப்படம் தென்கரையில உள்ள டி ஆர் மகாலிங்கம் அவர்களின் இல்லத்தில் எடுக்கப்பட்ட திரைப்படம். எனவே டி ஆர் மகாலிங்கத்தின் நூற்றாண்டு விழாவிற்காக தென்கரை கிராமமே விழாக் கோலம் பூண்டுள்ளது.

ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்.
பதிவு அலுவலகம் : 501, சல்கான் ஆரம், ஜசோலா மாவட்ட மையம், புதுடெல்லி –110025
CIN : U65900DL2020PLC366027

ஏல அறிவிப்பு

வங்கியினால் வழங்கப்பட்ட தனிப்பட்ட அறிவிப்புகள் உட்பட பல்வேறு கோரிக்கைகள் மற்றும் அறிவிப்புகள் அனுப்பியபோதிலும், வங்கியிடமிருந்து பெற்ற தங்க நகை கடன்/கள் அவர்களால் சரி செய்யப்படவில்லை என்பதை ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்டின் கீழ்க்கண்ட கடன்தாரர்களுக்கு இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம். வங்கியில் செக்யூரிட்டியாக வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளை ஏலம் விட முடிவு செய்யப்பட்டுள்ளது, அதன்படி 27.06.2024 அன்று மாலை 3:00 மணிக்கு கடன் பெற்ற கிளை வளாகத்தில் ஏலம் விடப்படும் என்று அனைத்து கடன்தாரர்களுக்கும் இதன் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி கடன் வாங்கியவர்கள், கணக்கு வைத்திருப்பவர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட அனைவரும் ஏலத்தில் பங்கேற்கலாம்.

கிளை	கணக்கு எண்	கணக்கு வைத்திருப்பவர் பெயர்	தந்தை/ மனைவி பெயர்	முகவரி	கணக்கு துவக்க தேதி	செலுத்த வேண்டிய தொகை
சென்னை	104142510218	சண்முகபிரியன் என்	த/பெ. நடராஜன்	1/43, சலார்பட்டி, வேடசந்தூர், கைத்தியன் கோட்டை, விருத்தலைப்பட்டி அஞ்சல், திண்டுக்கல், திண்டுக்கல், தமிழ்நாடு 624711	12/02/2024	125,538.49

ஏல தேதி 27.06.2024 அன்று மாலை 3.00 மணி

எந்தவொரு முன்னறிவிப்பும் இன்றி ஏலத்தில் இருந்து எந்தவொரு கணக்கையும் நீக்க அல்லது ஏலத்தை ரத்து செய்ய வங்கிக்கு உரிமை உள்ளது.
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்.